செ.வெ.எண்.194/2018 நாள்: 11-05-2018

**தமிழ்நாடு உணவு பாதுகாப்புத்துறை மற்றும் மருந்து நிர்வாகத்துறை சார்பில் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மையம், நடமாடும் உணவு பாதுகாப்பு வாகனம், தகவல் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் தமிழ்நாடு உணவு பாதுகாப்புத்துறை மற்றும் மருந்து நிர்வாகத்துறை சார்பில் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மையம், நடமாடும் உணவு பாதுகாப்பு வாகனம், தகவல் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சிகளை பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுற்றுத்தலங்களான காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் மற்றும் மாமல்லபுரத்தில் கோடைகால உணவு பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மையம் நடத்தப்படுகிறது. இம்மையத்தில் உணவு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பாதகைகள், உணவு பொருள் பொருட்காட்சிகள் இடம்பெற்றுள்ளது. மேலும் நடமாடும் உணவு பாதுகாப்பு வாகனமும் அப்பகுதிகளில் விழிப்புணர்வு பாதகைகளை தாங்கி வலம்வரும். உணவு குறித்த சந்தேகங்களுக்கு மக்கள் அரசினால் அமைக்கபட்டுள்ள தகவல் மையம் மற்றும் வாட்ஸ்ஆப் எண்ணான 9444042322 என்பதிலும் தொடர்பு கொண்டும் பயன்பெறலாம். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் சனி, ஞாயிறு இருநாட்களிலும், மாமல்லபுரத்தில் தினந்தோறும் இவ்விழிப்புணர்வு மையம் செயல்படும். மாமல்லபுரத்தில் உணவு பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் அப்பகுதியில் ஓட்டல், துரித உணவகம், பல்பொருள் அங்காடி உட்பட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பார்வையிடுவார்கள். இதுபோன்று பேருந்து நிலையத்தில் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு மையம் அமைக்க அதிகாரிகளை அறிவுறுத்திள்ளேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வாலாஜாபாத் பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், திருமதி.மைதிலி திருநாவுக்கரசு, முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.காஞ்சி பன்னீர் செல்வம், ஒன்றியக்குழுத்தலைவர் திரு.ஜீவானந்தம், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.செந்தில்குமார், மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் மரு.ராமகிருஷ்ணன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**

காஞ்சிபுரம்